# என்றும் வாழும் பாரதியார்



தொகுப்பாசிரியர்
தமிழ்ச்செம்மல் பாவலர்மணி
**இராம வேல்முருகன்**

# என்றும் வாழும் பாரதியார்

தொகுப்பாசிரியர்

தமிழ்ச்செம்மல் பாவலர்மணி
இராம வேல்முருகன்

வெளியீடு

தஞ்சைத் தமிழ் மன்றம்

நூல்பெயர் : என்றும் வாழும் பாரதியார்
வகை : மரபு - எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
தொகுப்பு : **இராம.வேல்முருகன் வலங்கைமான்**
பதிப்பு : **தமிழ்நெஞ்சம் அமின்**
முதல் பதிப்பு : சனவரி 2023
பக்கங்கள் : 116

தமிழ்நெஞ்சம் இணைய தளத்திலிருந்து நூலினை இலவசமாகப் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்
https://tamilnenjam.com/wp-content/uploads/2022/12/என்றும்-வாழும்-பாரதியார்_ebook.pdf

# என்னுரை

வணக்கம்

நிலாமுற்றம் முகநூல் குழுமத்தில் நடைபெறும் மரபுக் கவிதை எழுதும் பயிற்சியில் வாரந்தோறும் சராசரியாக தொண்ணூற்றைந்து கவிஞர்கள் தங்கள் கவிதைகளை எழுதி வருகின்றனர். பாரதியின் பிறந்த நாளை முன்னிட்டு பத்தாவது வாரத்தில் நடத்தப்பட்ட எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் எழுதுவதற்கான போட்டியில் பாரதியாரைப் போற்றும் வகையில் எழுதுவதற்குத் திட்டமிடப்பட்டு, போட்டியில் 100 கவிஞர்கள் தங்கள் கவிதைகளைப் படைத்துள்ளனர். போட்டி அறிவிப்புக்கு எழுதப்பட்ட எனது இரண்டு விருத்தங்களும் சேர்ந்து 101 கவிஞர்களின் 102 விருத்தங்கள் நிறைந்த தொகுப்பாக இந்நூல்வெளியிடப்படுகிறது.சனவரிதிங்கள்தமிழ்நெஞ்சம் மின்னிதழுடன் இணைப்பாக வெளியிடப்படுவதோடு தஞ்சைத் தமிழ்மன்றத்தின் நான்காம் ஆண்டுவிழா மேடையிலும் இந்நூல் வெளியிடப்படுவது மிகுந்த மகிழ்வையளிக்கிறது .

இந்நூலில் இடம்பெற்றுள்ள கவிஞர்கள் அனைவருக்கும் இனிய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு,

போட்டி நடத்த தளம் தந்து உதவும் நிலாமுற்ற நிறுவனர் திருமிகு முத்துப்பேட்டை மாறன் மற்றும் நிர்வாகிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலை அழகாக வடிவமைப்பு செய்து தந்ததோடு தொடர்ந்து கவிஞர்களை ஆதரித்து ஊக்கப்படுத்திவரும் தமிழ்நெஞ்சம் ஆசிரியர் பாவலர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கும் தஞ்சைத் தமிழ் மன்றத்தின் சார்பாக இனிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை அச்சிட்டு வெளிவருவதற்குப் பொருளுதவி செய்த குடந்தை அரசினர் கலைக்கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் பெ.. ஜெயசந்திரன் அவர்களுக்கும் எனது இனிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராம வேல்முருகன்

வலங்கைமான்
18.12.2022

குடந்தை பெ.வெற்றிநிலவன்
(முனைவர் பெ.ஜெயச்சந்திரன்,
தமிழ் உதவிப் பேராசிரியர்,
மாநிலக்கல்லூரி,
சென்னை)

# வாழ்த்துரை

ஒரு நூலை வெளியிடுவதென்பது எளிதான செயலன்று. தாமாக படைக்கிற படைப்புகளைத் தொகுத்து நூலாக்குவது எளிது. பலருடைய படைப்புகளையும் பாங்குற பெற்று வகைத்தொகை செய்து வெளியிடுவது அரிது. அதனினும் கடினமானது ஒரு போட்டியை நடத்தி, அதுவும் மரபுக் கவிதைப் போட்டி நடத்தி அந்தக் கவிஞர்களுக்கு அணிசேர்க்கும் விதமாக நூலாக்கம் செய்தல் அரிதினும் அரிதாகும். இந்தச் செயலினை செம்மையாக செய்திருக்கின்ற மதிப்பிற்குரிய தமிழ்ச்செம்மல், பாவலர் மாமணி இராம.வேல்முருகனார் அவர்களின் பணி தமிழுக்கு அணியாகவே அமைந்திருக்கின்றது என்பதில் ஐயமில்லை.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற

மரபுப் பாவலர்களோடும் கவிஞர்களோடும் நெருக்கமாக உறவாடுகின்ற தனித்துவமான பாவலர் தமிழ்த்திரு இராம.வேல்முருகனார் அவர்கள். நேரடியாகவும் இணைய வழியாகவும் முகநூல் வழியாகவும் இயங்குகின்ற பற்பல இலக்கிய... கவிதை... சமூக அமைப்புகளில் செயலாற்றி வருகின்றவர். தஞ்சைத் தமிழ் மன்றத்தின் செயலாளராகவும், நிலா முற்றம் குழுமத்தின் செயலாளராகவும் செம்மையாக பணியாற்றி வருகின்றார். கவியரங்கம், பட்டிமன்றம், சிறப்பு பொழிவுரைகள், திருக்கோயில்களில் விழாவுரைகள், விழா வருணனைகள் என பன்முகத் தன்மையோடு இயங்கித் தமிழுக்குத்தொண்டாற்றிவருபவர். வலங்கைமான்அரசினர் பலதொழில்நுட்ப கல்லூரியில் பணியாற்றி வருகின்றார். ஏழை எளிய மக்களின் பிள்ளைகளான மாணவர்களுக்கு நல்வழிகாட்டும் நெறியாளராகவும் தொண்டாற்றுகின்றார். அத்தகைய பணிகளின் ஊடாக தமிழ்ப் பணிகளையும் போற்றுதலோடு செய்கின்றார். அத்தகைய பணிகளுக்காக தமிழ்நாடு அரசு ‘‘தமிழ்ச் செம்மல்’’, ‘‘தூயத்தமிழ்ப் பற்றாளர்’’ முதலான விருதுகளைப் பெற்றுள்ளார் என்பது சிறப்பம்சமாகும்.

மரபுக் கவிதைகளை எளிதாக அனைவரும் இயற்றிட வழிகாட்டும் முகநூல் வழியாக பயிற்சியும் விளக்கமு மாக கட்டுரைகளைப் பதிவிட்டு வந்தார். பலரின் பாராட்டுகளையும் பெற்ற அந்த பதிவுகளை பலரின் வேண்டுகோளுக்கிணங்க “கவிதைக்கு இலக்கணம்” என்னும் பெயரில் நூலாக வெளி யிட்டுள்ளார். புதுக்கவிதை, ஐக்கூ கவிதை, தன்முனைக் கவிதைகள் என அனைத்து வகையான கவிதைத் துறைகளிலும் பரிட்சயமானவர். இந்தக் கவிதைகளுக்கும் சிலநாட்களுக்கு முன்னர் விளக்க இலக்கண பதிவுகளை வெளியிட்டுள்ளார். விரைவில் அதுவும் நூலாக வெளிவரும் என்கிற நம்பிக்கையுள்ளது.

''சமகாலக் கவிஞர்கள்'' குறித்த அறிமுக தகவல் கவிதை நூலை வெளியிட்டுள்ள கவிஞர். தற்போது அமரகவியான மகாகவி பாரதியார் குறித்த தகவல்களை வெளிக்கொணரும் விதமாக பன்முகத்தன்மையோடு ''நிலா முற்றம்'' முகநூல் கவிதைக் குழுமத்தில் எண்சீர் விருத்தப்பா போட்டியினை நடத்தினார். அப்போட்டியின் நெறியாளராக இருந்து அப்பணியினை மேற்கொண்டார். அப்போட்டியில் கனடா, இலங்கை, யாழ்ப்பாணம், பிரான்சு, மஸ்கட் முதலான அயல்நாடுகளிலிருந்தும் புதுச்சேரி, பெங்களூரு முதலான அயல் மாநிலங்களிலிருந்தும் தமிழ்நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களிலிருந்தும் கவிஞர்கள் பங்கேற்றார்கள். அந்த வகையில் நூறு விருத்தங்கள் போட்டியில் இடம்பெற்றறன. அனைத்தும் சிறந்த கவிதைகளாகவே அமைந்தன. அந்தக் கவிஞர்களின் பாக்களோடு தொகுப்பாளரின் இரண்டு விருத்தங்களும் இடம்பெற்றுள்ளன. அவற்றைத் தொகுத்து ''என்றும் வாழும் பாரதியார்'' என்கிற தொகுப்பாக வெளியிடுகின்றார். இந்தத் தொகுப்பானது பாரதி குறித்த தகவல் களஞ்சியமாகவும் கவிதைக் களஞ்சியமாகவும் விளங்குகின்றது. தமிழ்கூறு நல்லுலகத்தில் இந்த நூல் பெரும் வரவேற்பை பெறுமென்பதில் ஐயமில்லை. தொகுப்பாசிரியர் பாவலர்மாமணி, தமிழ்ச் செம்மல் இராம. வேல்முருகனார் அவர்களுக்கு இனிய நல்வாழ்த்துகள். இத்தகைய முயற்சிகள் தொடரட்டும். தமிழ்மொழி வளமாகட்டும்.

## முனைவர் பெ. வெற்றிநிலவன்

திருவல்லிக்கேணி,
சென்னை.

## என்றும் வாழும் பாரதியார்...

தேரெலாம் இழுக்கும் வண்ணந்
தெள்ளிய தமிழ்வ டத்தை
ஊரெலாம் இழுத்துப் பாட்டால்
உன்னத சுதந்தி ரத்தைப்
பாரெலாம் வியக்க வாங்கி
பாரதம் மகிழத் தந்த
சீரெழில் பார திக்குச்
சிறப்புடன் வாழ்த்துக் கூட்டம்
.
பற்பல கவிகள் கூடிப்
பைந்தமிழ் தன்னைக் கோத்துக்
கற்பனை உலகில் மூழ்கிக்
கவின்மிகு சொற்கள் எண்ணி
அற்புத மான நூலை
அளித்தொரு சரித்தி ரத்தைப்
பொற்குடம் போல ளித்தப்
புதுமையை என்ன சொல்வேன்
.

செப்படி வித்தை கொண்ட
          சீர்மிகு பார திக்கோர்
ஒப்பிலாக் கவிகள் தன்னை
          ஒருங்கவே தொகுத்து வைத்த
முப்பெரும் தமிழை ஆளும்
          முனைவராம் ராம வேலர்க்(கு)
எப்படி நன்றி சொல்வேன்
          இனிதென வாழ்த்து ரைப்பேன்

.

வலங்கையார் தொகுப்பும் வாழ்க
          வாய்த்தநற் கவிகள் வாழ்க
கலங்கரை விளக்கம் போலக்
          கைகளில் நூலும் வாழ்க
பலத்துடன் ஒருங்கி ணைந்தப்
          பாவலர் கூட்டம் வாழ்க
நலத்துடன் தமிழின் ஊடே
          நாளெல்லாம் வாழ்க வாழ்க

.

அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்

பிரான்சு

## உள்ளடக்கம்
## ஆக்கிய கவிஞர்கள்


1. குளோரி சக்தி கரூர்
2. கு.கதிரேசன் திருச்சி
3. மைக்கேல் ராஜ்
4. செ கதிரவன் சென்னை
5. மருத்துவர் தேவி கோவை
6. பாளை பாஸ்கி
7. தம்பலகமம் கவிதா
8. செல்வராஜா சுதாகரன் இலங்கை
9. கவியன்பன் கலாம்
10. மாலதி திரு தஞ்சை
11. மா பாலசுந்தரம் மதுரை
12. கண்மணி கண்ணன் சென்னை
13. லலிதா நவின்
14. திருமதி செ தெய்வேந்திரமூர்த்தி இலங்கை
15. ஓசூர் மணிமேகலை
16. தனராஜ் பாப்பணன் கோவை
17. பெ தி சுகுமார் திருச்சி
18. கேசவதாஸ் சுசீந்திரம்
19. ப.முருகன்யோகீஸ்வரர்
20. இரா வெங்கடாசலம் கரூர்
21. செபா சவிரிமுத்து
22. பாண்டிச்செல்வி கருப்பசாமி கோவை
23. சு.யோ.முத்தமிழ்ச்செல்வி நத்தம்
24. செண்பக ஜெகதீசன்
25. மு வா பாலாஜி

26. கோ பாலசுப்ரமணியன் தஞ்சை
27. ம பழனிச்சாமி
28. மு.இரசியாபேகம்
29. கமலா ஜெயபாலன்
30. முனைவர்  ஜெயா உதயா, இலங்கை
31. ந.இரா.இராசகுமாரன் கோவை.
32. வ. பழனி, புதுச்சேரி
33. தகடூர் தமிழ்முருகன்.
34. இரா.செல்வ பாண்டியன் புத்தாம்பூர்
35. கண்ணன் நடராஜன் பெங்களூரு
36. தாழை ந இளவழகன் மணப்பாறை
37. கோபால்  சத்தியமங்கலம்
38. நிறைமதி நீலமேகம் பெண்ணாடம்
39. பாரதி கரு.இளஞ்செழியன் அறந்தாங்கி
40. ஈச்சிலம்பற்று மதிபாலசிங்கம்
41. மதுரை குமரன்
42. கிண்ணியாசபீனா இலங்கை
43. தென்றல்கவி பட்டுக்கோட்டை
44. இராசகோபால் கவிநெஞ்சன் சென்னை
45. வீரா பாலச்சந்திரன் திருச்சி
46. கந்தநாதன் மஸ்கட்
47. சௌ.நாகநாதன்  இராமநாதபுரம்
48. மாரி. வசந்த குமார்  திருச்சி.
49. கவிஞர் செகவான் மதுரை
50. ஆ முருகேஸ்வரி

51. மாலினி கென்னடி இலங்கை
52. புட்பா கிறிட்டி கனடா
53. இரா.கவிதா திண்டுக்கல்
54. தென்பரைத் தமிழன்பன்
55. பால கார்த்திகேயன்
56. ஔவை
57. வா சண்முகம் பட்டீச்சுரம்
58. ஜோதிபாசு முனியப்பன் சென்னை
59. இரா. வேணுகோபாலகிருஷ்ணன். கோவை
60. சேந்தன்குடிச் செந்தமிழாழன் புதுக்கோட்டை.
61. ரா.ரேகா ராஜகுமார்
62. கு.மலர்செல்வி
63. தி.இராஜபிரபா தேனி
64. பவானி ரெகு
65. பா.ச.கண்ணன்
66. இரா.மதனகோபாலன், தர்மபுரி
67. மகேசுவரி முருகையா
68. மு.இரெ.முத்து பட்டுக்கோட்டை
69. ஜெ..வசந்தி இலங்கை
70. முருகன் ஊர்க்காவல் சென்னை
71. தங்க.ஜான்பீட்டர் பாளையங்கோட்டை
72. க.தங்கவேலு கிருஷ்ணகிரி
73. கோவிந்தம்மாள் இரத்தினம் குடியாத்தம்
74. கீத்தா பரமானந்தன்
75. மகேஸ்வரி கிருஷ்ணசாமி

76. சுப கல்யாணம் பேராவூரணி
77. சசி முத்து, கருமாத்தூர், மதுரை.
78. த.புவனேசுவரி கிருஷ்ணகிரி
79. முத்து பரமசிவம்
80. சு பசுங்கிளி திருநெல்வேலி
81. செ நிறைமதி மதுரை
82. தமிழ் நெஞ்சம் அமின் பிரான்சு
83. இரா இரத்தினகுமார்
84. செல்லமுத்து பெரியசாமி
85. பொ.முத்துராக்கு காரைக்குடி
86. சிவம் முத்து
87. தம்பித்துரை குணத்திலகம் இலங்கை
88. வைர வசீகரன் யாழ்ப்பாணம்
89. சுப சாவி திருவிடைமருதூர்
90. செந்தமிழ் இலங்கை.
91. கோ.அருச்சுனன்
92. புஷ்பகலா ரவீரதன்
93. உமா ஜெம்புநாதன்
94. ஆர் குணசேகரன்
95. பொன் இளையகுமார்
96. ஜெகதாம்பாள் ராஜீவன்
97. வள்ளல் இராமமூர்த்தி
98. ந.மணிமாறன்
99. லீலா லோகநாதன் ஆரணி
100. எம் ஆர் ஜெயந்தி தஞ்சாவூர்
101. இராம வேல்முருகன் வலங்கைமான்



1

வஞ்சத்தில் வீழ்ந்திட்ட மாந்தர் தம்மை
வாழ்விக்க வழிசொல்லிப் பாடிச் சென்றாய்
நஞ்சாகப் பரவிநின்ற அடிமை நீக்க
நாள்தோறும் விழிப்புணர்வுப் பாக்கள் தந்தாய்
விஞ்சுபுகழ்த் தமிழாலே வையம் வென்று
விந்தைபல புரிகின்றாய் இன்றும் நீயே
நெஞ்சத்தில் வைரமுடைத் திண்மை யாலே
நெருப்பாகக் கனன்றபெருஞ் சுடரே வாழ்க!

குளோரிசக்தி கரூர்



2

பாட்டுக்கோர்  கவிஞனெனப் பிறந்த மேதை
பாக்களாக எழுதிவிட்டான் எங்கும் பாரீர்/
நாட்டுக்கு  நல்லதையே செய்ய வந்தான்
நாடாளு மென்னமது சிறிதும் கொள்ளான்/
காட்டிலுள்ள குயிலையுமே பாட்டில் வைத்தான்
கானமதை இனிமையாக இயற்றச் செய்தான்/
கூட்டிலுள்ள மனிதர்கள் வெளியே வந்து
கூடிடவே ஒற்றுமையை ஓங்க வைத்தான்.../

கு.கதிரேசன்



எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்



3

வஞ்சத்தில் தாழ்ந்திட்ட வறியோர் தம்மை
வாழ்விக்க வழிகாட்டிப் பாடிச் சென்றாய்
நஞ்சாகப் பரவிநின்ற வறுமை நீங்க
நற்செய்தி நிறைந்திட்ட பாடல் தந்தாய்
விஞ்சுதமிழ் மொழியாலே ஐயம் வென்று
விந்தைபல புரிகின்றாய் இன்றும் நீயே
நெஞ்சத்தில் உரம்நிறைந்த திண்மை யாலே
நெருப்பாகக் கனன்றவீர பாரதி வாழ்க!

மைக்கேல்ராஜ்



4

தேனெடுத்துத் தமிழ்வடித்த பாக்கள் பூண்ட
தேரோட்டி பாரதியாய் மண்ணில் வந்தான்
வானெடுத்து வளைத்திடுமோர் வார்த்தை பூட்டி
வாள்முனையின் கூரெனவே மொழியில் நின்றான்
ஊனெடுத்த மானுடமும் வியந்து நிற்க
ஊற்றெடுக்கும் கவியாலே உலகை வென்றான்
கோனெடுத்த மன்னனெனத் தமிழை வெற்றிக்
கோலமிட்டு ஞானமிட்ட கலையாய்த் தந்தான்

செ கதிரவன்



5

எண்ணிலடங் காப்பாடல் எழுதி வைத்த
இன்தமிழர் பாரதியைப் பாட வாரீர்
பண்களிலே சிறந்தவராம் பாக்க ளெலாம்
பாரதத்தின் விடுதலைக்காம் படித்துப் பாரீர்
கண்ணம்மா காதலரைக் கருத்தில் கொண்டு
காவியங்கள் எழுதிவைத்தால் மிக்க நன்று
பெண்ணியத்தைப் போற்றியவர் அவர்தா னென்று
பெருமையாகச் சொல்லிடுவோம் அதுவே நன்று

மருத்துவர் தேவி



6

பாழ்பட்ட நாட்டினையே வளமாய்த் தந்தாய்
    பகுத்தாய்ந்து பண்ணோடு பாவும் ஈந்தாய்
வாழ்கின்ற மாந்தர்க்கு விடியல் தந்தாய்
    வருங்காலம் சீர்தூக்கிக் கண்ணாய் ஈந்தாய்
வீழ்கின்ற போதெல்லாம் விழுதாய் நின்றாய்
    விழிவேண்டும் பாட்டெல்லாம்  நித்தம் செய்தாய்
சூழ்கின்ற சூழ்ச்சிக்கும் சுகமே தந்தாய்
    சுவைகூட்டி சொல்லுக்குள் வித்தை நெய்தாய்

பாளை பால்கி



எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்



7

கன்னலெனத்  தமிழினிலே கவிதை தந்தாய்
    கானகத்துக் குயில்களையும் கவர்ந்து சென்றாய்
மின்னலென வார்த்தைகளால் முழக்கங் கொண்டு
    மிகையாம்பெண் ணடிமையை விலக்கி வைத்தாய்
தன்மூச்சைத் தமிழென்று தாங்கி நின்றாய்
    தரணியிலே தமிழ்வாழத் துணிந்து வென்றாய்
நன்னெறியில் வாழ்ந்திடவே நவின்ற நல்லோய்
    நானிலமும் போற்றிடுமுன் நாமம் வாழ்க!

தம்பலகமம் கவிதா.



8

கவிதையினால் கயவர்கள் கலைந்து செல்லக்
கச்சிதமாய் வடித்திட்ட கவிதை வேந்தன்
புவியதனில் பலமொழிகள் புரிந்து கொண்டான்
புதுக்கவிதை பலதந்து புகழும் பெற்றான்
நவிலுகின்ற வார்த்தைகளில் நன்மை கண்டான்
நங்கையரின் கற்பினையே நவின்று நின்றான்
தவிக்கின்ற தமிழுக்குத் தலைமை ஏற்றான்
தரணியதில் தலைசிறந்த கவிஞன் ஆனான்.

செல்வராஜா சுதாகரன்- வயலூரான்



9

சிந்துக்குத் தந்தையெனப் பிறந்தாய் நீதான்
　　சிந்திக்க வைத்ததிலும் முதல்வன் ஆனாய்
வந்தவரெல் லாம்நம்மை ஆள்தல் கண்டு
　　வனைந்திட்ட. நின்பாக்கள் நெருப்புக் குண்டு
நந்தவன மாகநம்தாய் நாடு மாற
　　நறுமணத்தை விடுதலையில் நுகர வைத்தாய்
சிந்துநதி யிசைகூட்டி நிலவைக் காட்டிச்
　　சீர்திருத்த கருத்துகளில் உரைத்தாய் நீயே

கவியன்பன் கலாம்



10

பாரதியார் என்றவுடன் பாப்பா பாட்டு!
பசுமையாகப் புதுக்கவிதை படைத்த யாற்றல்!
ஆரணமாய் அணிவகுத்த அமுதின் நூல்கள்
ஆனந்த சுதந்திரத்தை அடைய வைக்க
வாரணமாய் எடுத்துரைத்த வளமாம் சொற்கள்!
வாணிகத்தைக் கைப்பற்றி வஞ்சம் செய்து
பாரதத்தை ஆண்டுவந்த பகைவர் நெஞ்சைப்
பண்படுத்திப் புதியபாதை படைத்தார் வாழ்க!

மாலதி திரு



11

முண்டாசு பாரதியின் பாடல் எல்லாம்
　　மூட்டிடுமோர் நெருப்பாகி உணர்வைத் தூண்டும்
உண்டான பற்றினிலே ஒளியும் தோன்றி
　　ஊர்நலனைக் காத்திடவே வீரம் ஊட்டும்
கண்டிடாத பாவலனைத் தமிழும் பெற்றே
　　கவிதைகளின் குவியலாகிக் களிப்பைக் கூட்டும்
உண்டிடாத வறியவர்க்கும் உரைவாள் ஏந்தும்
　　உத்தமனின் சத்தியத்தால் வெற்றி கிட்டும்.

மா.பாலசுந்தரம்



12

முண்டாசும் முறுக்கியநல் மீசை கொண்டே
அண்டத்திற் கடையாள மான வன்நீ
கொண்டாடி வாழ்ந்ததெலாம் தேசம் ஒன்றே
கொள்கையிலே ஒருநாளும் தொய்ந்த தில்லை
துண்டாடிச் செல்லவந்த துரைமா ருக்குத்
தூக்கத்தைத் தொலையவைத்த கனவும் நீயே
சண்டாளர் சதியாவும் முறிய டித்தே
சரித்திரத்தின் முகவரியாய் நிலைத்து விட்டாய்

'கண்மணி'– கண்ணன்



13

நற்கவிதை நமக்களித்த நண்பா அன்பா
நல்லதெல்லாம் நானிலத்தில் விதைத்தாய் வாழ்க
பொற்கரத்தால் புனைந்ததெல்லாம் புதையல் என்பேன்
புவியதனில் பிறந்தவெங்கள் வரமே வாழ்க
கற்றவித்தை கவியினிலே தந்தாய் நின்றாய்
கனியதையும் கருணையையும் உண்டோம் வாழ்க
நற்றமிழின் நற்புதல்வா நானுன் தாசன்
நிலமகளின் இறுதிவரை கவியே வாழ்க

லலிதா நவின்



14

துடித்தெழவே முழக்கமெனப் பாடல் பாடித்
துயரமதைத் துடைத்தெறிந்த கவிதை கோடி
பிடித்திடவே தமிழன்னை பாதம் நாடிப்
பிறந்ததற்கே அர்த்தமெலாம் தந்தான் வாடி
மடிந்திடாத கவியாற்றில் மகிழ்ந்தான் கூடி
மலர்ந்தவெங்கள் சுதந்திரத்தை கனவில் தேடி
விடிவனைத்தும் விளைவதற்கே விதைத்தான் ஓடி
விடிவெள்ளி அவனன்றோ வியப்பின் ஆடி!

திருமதி செ.தெய்வேந்திரமூர்த்தி.



15

எண்ணமெலாம் உயர்ந்திடவே எழுச்சி தந்தான்!
ஏற்றமிகு வீறுடனே எழுத்தில் வென்றான்!
வண்ணமிகு பாக்களிலே வலிமை யீந்தான்!
வாழ்கின்ற நாள்களிலோ வறுமை கண்டான்!
மண்ணுலகில் மாகவியாய் மாண்பாய் நிற்பான்
மாசில்லாக் கவியவனை மனத்தில் கொள்வோம்!
பெண்மையினைக் கூத்தாடிப் பெருமை கொண்டான்!
பெருமிதமாய்ப் பாரதியைப் பேறே என்போம்!

ஓசூர் மணிமேகலை



16

பலமொழிகள் கற்றதமிழ்ப் பாவ லர்தான்
பாட்டாலே சுதந்திரப்போர் தொடுத்த வர்தான்
கலங்கவைத்துப் பரங்கியரைக் கடிந்த வர்தான்
கவிதைவரி சாட்டையெனக் கொண்ட வர்தான்
சிலகாலம் வாழ்ந்தாலும் சிங்கத் தோற்றம்
சிரமுயர்த்தி வாழ்வதைத்தான் சொன்னா ரேற்றம்
உலகினிலே பாரதியார் உயரம் நின்றார்
உயிருள்ள பாக்களைத்தான் உலகுக் கீந்தார் !

தனராஜ் பாப்பணன் கோவை



17

தாழ்வில்லாச் சிந்தனையில் தன்னை வைத்தே
 தாழ்வுற்றச் சமூகத்தைப் பார்த்தார் நின்றே
தாழ்மையிலே நின்றிட்ட பெண்கள் கண்டு
 தாழுடைக்க விலங்கறுக்க வேண்டும் என்றார்
வாழ்நெறியை மேம்படுத்தும் பாக்கள் யாத்தார்
 வாழ்வியலை மாற்றிடவும் ஆக்கம் தந்தார்
வீழ்சமூக உயர்வுக்காய் அழைத்தார் மேவி
 வீழ்சுயத்தை மறந்திட்டும் விளித்தார் கூவி

மருத்துவகவிஞர் பெ.தி.சுகுமார்



18

தாழ்வுற்றுத்  தறிகெட்டுத் தளர்ந்து போன
தமிழகத்தைத் தலைநிமிர்த்தக் கவிஞன் வந்தான்
பாழ்பட்ட சமுதாயம் எழுச்சி காணப்
பைந்தமிழின்  பாட்டாலே முடுக்கி விட்டான்
வாழ்வுற்ற மொழியாலே கவிதை தந்து
வையகத்தை மனவெழுச்சிப் பெறவும் செய்தான்
காழ்ப்பின்றி மாகவியை வணக்கம் செய்வோம்
ககனமெலாம் பாரதியை வணங்கும் நாளில்.

கவிஞர் கேசவ தாஸ் சுசீந்திரம்



19

செந்தமிழில் பனுவல்கள் சுவைக்கத் தந்த
சீற்றமிகு பாரதியார் செய்த வேள்வி
சொந்தமெனப் பாரதத்தைக் சுருட்டிக் கொண்ட
சூழ்ச்சியினை வேரறுக்கத் துணிந்த வீரர்
அந்நியரின் ஆட்சியினை எதிர்த்த போரின்
அதிசயமே அனைவரையும் கவர்ந்த மோகம்
வந்தனையே யாம்வழங்கும் பரிசின் வாய்மை
வாழியவே என்றென்றும் தூய உள்ளம் .

ப. முருகன் யோகீஸ்வரர்



20

ஆழமான படிப்பில்லை அடிமை வாழ்வில்
அவரவரின் பிழைப்பொன்றே கண்முன் நிற்க
ஓலைகளை புரியாமல் பரணில் போட்டே
உதவாதாம் அவையென்று நதியில் விட்டார்
ஆலயங்கள் வேதியர்கள் சொல்லைக் கேட்டு
அவ்வப்போ(து) எரிதணலில் எறிந்தும் விட்டார்
சீலமிகு பாரதியின் எளிய சொற்கள்
சிந்தைதொட படித்ததனைப் போற்றி நின்றார்.

இரா.வெங்கடாசலம்.



21

குண்டுதுளை கருவிகொண்டு வந்து நின்று
    குடிமக்கள் உரிமையது பறிக்கும் எண்ணம்
கொண்டவேற்றூர் வெள்ளையனின் வருகை அன்று
    கோபக்க னலூட்டியது பார திக்கு
மண்டியிடு வார்கண்டு நெஞ்சு வெந்து
    மானிடாமா னமில்லையோ உனக்கும் எங்கள்
மண்ணைவந்த வன்கைக்குள் அமுக்கப் பார்த்தும்
    மனம்வெந்தி டாநிற்றல் முறையோ என்றார்

செபா சவிரிமுத்து



22

கச்சைகட்டிச் சுதந்திரமும் கிடைக்க நின்று
கரைகாணா மேடைகளும் கண்டான் நேற்று
துச்சமாக வெள்ளையனைத் தூசாய்த் தட்டித்
துவளாமல் குன்றெனவே கவிஞன் வென்றான்
அச்சமில்லை என்றெய்த கவிதை அம்போ
அடங்காது பாரதியின் குரலாய்க் கேட்க
இச்சகமும் வாழ்ந்திடவே எடுத்துக் கூறி
இளைப்பாறச் சென்றதுவோ இவனின் மூச்சு

பாண்டிச்செல்வி கருப்பசாமி கோவை



23

பாட்டிலேயே சாதனைகள் படைக்க  வந்தான்
பாரதியாம்  பெருங்கவிஞன் உலகில் தோன்றி
ஏட்டிலேயே கவிதைகளும் எழுதி வைத்தான்
ஏழ்மையான சூழலிலே வாழ்ந்த போதும்
நாட்டிலேயே நிலவுகின்ற நிலைமை கண்டு
நல்லதையே செய்திடவும் துடித்த மேதை
காட்டிலுள்ள  பறவைகளும் மகிழும் வண்ணம்
கவிதையிலே வைத்தவற்றைப் பாடிச்  சென்றான்

சு.யோ.முத்தமிழ்ச்செல்வி, நத்தம்



24

என்றுமுள செந்தமிழுக் கேற்றம் தந்தான்
    ஏற்றமிக்க இளசையென்னும் மண்ணின் மைந்தன்,
குன்றெனவே நிமிர்ந்துநின்றான் கவிதை யாத்தே
    குறைவில்லாப் புதுமைகளைத் தமிழில் தந்தே,
வென்றிடவே விடுதலையை அச்சம் போக்கி
    வெல்லுமுன்னே பாடிவைத்தான் வெற்றிப் பள்ளு,
தென்றலாகப் புயலாக வந்து சென்ற
    தென்னவனாம் பாரதியை வாழ்த்து வோமே.!

செண்பக ஜெகதீசன்



25

நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் நீயே
　　நுழைபுலத்தால் மேனோக்கி எரிந்த தீயே
மாற்றாகித் தமிழுக்கு மகுடம் செய்தாய்
　　மானுடத்தின் மேன்மைக்குக் கவிதை நெய்தாய்
ஊற்றாக ஊறிவரும் உணர்வைத் தந்தாய்
　　உந்துவிசை அளிப்பதற்கே உலகில் வந்தாய்
காற்றாக உன்பாட்டு ஒலிக்கும் எங்கும்
　　காலத்தால் அழியாது கதிராய்த் தங்கும்

மு. வா. பாலாஜி



26

நெஞ்சத்தில் நிறைந்திட்ட நேசம் பாரீர்
நெருப்பதனால் கவிதைகளைத் தந்தார் பாரீர்
வஞ்சத்தில் வாழ்ந்திட்ட மாந்தர் தேற்றி
வையத்தில் வாழ்ந்திட்ட தெய்வம் பாரீர்
கொஞ்சமின்றிச் செய்திட்ட உதவி பாரீர்
கொடுத்ததனால் வாழ்ந்திட்ட சிறப்பைப் பாரீர்
விஞ்சிநிற்கும் தமிழதனின் வியப்பைப் பாரீர்
வீரத்தின் பாடல்கள் சிறப்பைப் பாரீர்

தஞ்சை கோ பாலசுப்ரமணியன்



27

தீந்தமிழைப் பாவடிவில் கற்றுத் தேர்ந்து
திக்கெட்டும் புகழ்பெற்றுக் கவிஞன் ஆனாய்
காந்தம்போல் ஈர்க்கின்ற சொற்கள் கொண்டு
கருத்துடனே வழிநடத்தும் கவிகள் தந்தாய்
பாந்தனாக முன்நின்று பாக்கள் பாடி
பாமரனின் மனத்தீயைத் தூண்டி விட்டாய்
மாந்தர்கள் மகிழ்ச்சியோடு வாழ்தல் வேண்டி
மாநிலத்தில் புரட்சியைவி தைத்தாய் நீயே

ம. பழனிச்சாமி



28

கண்டமதில் கவிபடித்த கண்ணன் தானே
கன்னலதை காதினிலே கவியாய் வார்த்தார்!
எண்ணத்தில் ஏற்றமுற எழுத்தில் ஏணி
எழுதியவர் அமைத்தாரே எங்கள் ஞானி!
முண்டாசு புலவனது முறுக்கு மீசை
மூவுலகைக் கட்டியதோ மொழியாய்க் கொட்ட,
வண்டமிழை வான்மழையாய் வழங்க வந்து
வான்புகழைக் கொண்டவராம் வாழ்க ! வாழ்க!

குயில். மு. இரசியா பேகம்



29

பெண்ணினத்தின் விடுதலைக்காய் புதுமை கண்டு
பெருமைதனை மாந்தர்க்குக் கொடுத்த வள்ளல்
எண்ணமெல்லாம் நாட்டிற்காய் யீந்து வாழ்வில்
ஏற்றமிகு வல்லமையும் தந்து நாளும்
வண்ணமுறு வாழ்வுதனை வறுமை கொண்டு
வாட்டிநின்ற போதினிலும் வேங்கை யாகி
விண்ணுயர வாழ்கின்ற விந்தை யோடு
விடுதலைக்கு விதைத்திட்ட வீறு மன்றோ

கமலா ஜெயபாலன்



30

தனிமனிதன் உணவின்றி தவிப்பான் என்றால்
தரணியழி என்றாய்நீ பசியைத் தாங்கி!
கனித்தமிழின் வளத்திற்குக் கவிதை சேர்த்தாய்
கடுகளவும் பொருள்சேரா வறியன் ஆனாய்
இனித்தமொழி தமிழென்றே எடுத்துச் சொன்னாய்
இலகுவாக பலமொழிகள் படித்த பின்பே
பனிஇமயம் குமரிவரை பரந்த ஆட்சி
பலமுடனே பாரதிசெய் பகலோன் போலே

முனைவர் ஜெயா உதயா, யாழ்...இலங்கை.



31

பெண்ணென்பாள் யாரென்று காட்டி வைத்தாய்
பெண்ணாளின் பீடெல்லாம் பாடி வைத்தாய்
கண்ணென்று ஞாலத்தில் காண வைத்தாய்
கானத்தால் நல்லாளை ஏற்றி வைத்தாய்
எண்ணத்தில் என்றென்றும் ஊற்றி வைத்தாய்
ஏடெல்லாம் ஆள்வாளைப் போற்றி வைத்தாய்
வண்ணத்தில் சேர்க்கின்ற வாய்ப்பை வைத்தாய்
வானாளும் பாவேந்தே என்றும் வாழ்க....!

ந. இரா. இராசகுமாரன் கோவை.



32

பாட்டினிலே விடுதலையை பாடி வைத்தார்
　　பாரெங்கும் பாரதியார் புகழே ஓங்கும்.
நாட்டினிலே தீண்டாமை நசுக்கி வைத்தார்
　　நல்லதமிழ் வளர்ந்திடவே முதன்மை நின்றார்.
வீட்டிலுள்ள பெண்களையும் படிக்கச் சொன்னார்.
　　விருப்பமுடன் பலபணிகள் செய்ய வைத்தார்.
ஏட்டினிலே பாஞ்சாலி சபதம் பாடி
　　எழுச்சிமிகு சிந்தனைகள் விதைக்கச் செய்தார்.

வ. பழனி, புதுச்சேரி



33

தித்திக்கும் தேன்தமிழின் அழியாச் சொத்தே
    தெவிட்டாத பாக்களுக்கு மூல வித்தே
எத்திக்கும் புகழ்பரப்பும் கவிதைக்கோவே
    எந்நாளும் உமக்கில்லை மண்ணில் சாவே
புத்திக்குள் சுரந்திட்ட அறிவாம் ஊற்றைப்
    புதுப்புதிதாய்ப் படைத்தாயே நல்ல பாட்டாய்
நித்திரையில் இருக்கின்ற தமிழர் தம்மை
    நீவந்தால் எழுப்பிடுவாய் மீண்டும் வாராய். !

தகடூர் தமிழ்முருகன்.



34

செல்லம்மாள் கரம்பிடித்தே சிறந்தான் நாளும்,
செம்மாந்தே நடையயின்றான் எவர்க்கும் முன்னே.
பொல்லாத வறுமைக்கு முடிவைத் தந்தான்.
பொருளுக்கு மயங்கிடாது புகழே கொண்டான்.
கல்லாத மனிதனையும், கவியாய் ஆக்கிக்
கற்கண்டாய்க் கவிபடைக்க வைத்தான் அன்னான்.
எல்லோரும் வாருங்கள் இன்றே நாமும்,
எட்டயத்தான் புகழ்பரப்ப இணைவோம் ஒன்றாய்.

இரா. செல்வ பாண்டியன்



35

பாரதியார் வாழ்க்கையினை பார்த்து நீயும்
    பாருக்கே உரைத்திடுவாய் பயத்தை நீக்கி
ஊரதனை எழுப்பிடுவாய் ஊக்கம் கொண்டே
    உற்சாகம் கொண்டிடுவாய் உண்மை சொல்ல
பேரதனை கேட்டாலே பெருமை யன்றோ
    பெரும்துன்பம்  பரங்கியனால் அவரின் வாழ்வில்
தேரடியாய்த் திகழ்ந்தாரே தினமும் நாட்டில்
    தென்னாடும் வடநாடும் இணைத்தார் பாட்டில்

கண்ணன் நடராஜன்



36

பாட்டினையும் பாரதியார் பாட்டன் தந்தார்
பாங்குடனே பாரதத்தார் போற்ற வல்லோன்
நாட்டுக்கு விடுதலையின் நாட்டங் கொண்டு
நவகவிதை நாளெல்லாம் நன்றே சொன்னான்
வீட்டுக்கு வீடெங்கும் வேட்கை பொங்க
வேல்விழியின் பார்வையினன் வெல்லும் முன்பே
நாட்டுக்கு விடுதலையும் பெற்றோ மென்று
நவின்றானே முண்டாசுக் கவிஞன் தானே

பாவலர் தாழை ந இளவழகன், மணப்பாறை



37

எட்டையபு ரத்தான்நீ எழுத்தின் ஊற்று
எழுச்சிமிகு கவிதையிலே விதைத்தாய் வித்து
நட்டுவைத்த  சுதந்திரத்தின் உணர்வைக் கண்டு
நம்பிக்கை கொண்டதையே வென்றாய் கெத்து
எட்டாத பெண்கல்வி கிடைக்க வேண்டி
எழுதிவைத்துக்  கண்திறந்தாய் கிட்டா முத்து
விட்டுத்தான் சென்றாயே வீரப் பேச்சு
விளையாடும் பாப்பாப்பாட் டெங்கள் சொத்து.

கோபால்  சத்தியமங்கலம்



38

பாரதியார் புகழ்தனையே பாடு வோமே
　　பயமின்றி நன்னடையும் போடு வோமே!
தீரமுடன் மடமைகளை தீயே யென்றே
　　தீயவற்றைப் பாட்டினிலே சாடி னாரே!
வீரமுடன் திகழ்ந்திடவே விதைத்தார் நெஞ்சில்
　　வெற்றிநடைப் போடுகின்றார் விழிப்போ டின்றே!
பாரினிலே அடுப்பூதும் பெண்க ளெல்லாம்
　　பாங்குடனே உயர்ந்தனரே புலவா வாழ்க!

நிறைமதி நீலமேகம், பெண்ணாடம்.



39

பலநூறு பாட்டெழுதிப் படைத்தாய் நன்றே!
　　பைந்தமிழைப் போற்றிநித்தம் பாடி நின்றாய்
உலகாளும் தமிழ்மொழியை உயர வைத்தாய்
　　ஒப்பில்லாத் தமிழென்றே உரக்கச் சொன்னாய்
தலைவணங்காக் கவிஞனாகத் தரணி யெங்கும்
　　தனித்துநின்ற தமிழ்த்தாயின் தவப்பு  தல்வா
சிலகாலம் வாழ்ந்தாலும் செப்பு கின்ற
　　செந்தமிழாய்ப் பாரதியே சேர்ந்தாய் வாழ்க!

பாரதி கரு.இளஞ்செழியன்



40

நனிசிறந்த  நற்பாக்கள் படைத்தாய் மண்ணில்
நானிலமும்  சிறப்புறவே  வியப்பாய் வாழ்ந்தாய்
கனிவினிலே  இசைக்கவிகள் கனிவாய்த் தந்தாய்
கார்முகிலாய்ச் சொரிந்திட்டாய் கன்னித் தமிழை!
தனிமனிதப்  பட்டினியை  வெறுத்தாய் நீயும்
தரணியதில் ஒளிவிளக்காய்த் தினமும் நின்றாய்
தனியாகக் கலங்காது தமிழைக் காத்தாய்!
தளராதத்  தலைமகனே வருவாய் மீண்டும்!

ஈச்சிலம்பற்று மதிபாலசிங்கம்



41

பாரதியே நின்பாக்கள் வேட்கை யூட்டிப்
　　பாருக்குள் பொங்குமவை எழுச்சித் தீயாய்!
சாரதியின் புயலெனவே ஊறும் சிந்தை
　　சாத்திரங்கள் மாய்ந்திடவே அசுரப் பற்றே
வேரறுக்கப் பிறந்தவனே தீராக் கொள்கை
　　வேள்வித்தீ யேற்றியநீ மாறாக் குன்றே
பேரருளே உனதாக வணங்கிப் போற்ற
　　பேராற்ற லனைவருக்கும் தருக நன்றே!

மதுரை குமரன்



42

கன்னலான கவிதையாலே கடமை செய்தாய்.
கற்கண்டுச் சொற்கொண்டே பெண்மை காத்தாய்
மன்றெங்கும் சாதிமத பேதம் போக்க,
மாண்பான பாட்டெழுதி முழக்கம் போட்டாய்.
மின்னுகின்ற பேரொளியாய் மேன்மை கொண்டாய்.
மேதினியில் இன்றமிழின் வேந்த னானாய்.
துன்பங்கள் துரத்திடவே துணிவும் தந்தே,
தூய்மைமிகு தேன்தமிழை வளர்த்தாய் போற்றி

கிண்ணியாசபீனா



43

பெண்களுக்காய்ப் பாடினானே முறுக்கு மீசை
பீடுநடை இட்டதுபார் புதிய பார்வை
கண்களிலே புரட்சிப்பூ பூக்கத் தோன்றும்
கடலளவுக் கணக்கின்றி அலையாய்ப் பொங்கும்
கண்ணம்மா செல்லம்மா கவிதை கண்டே
களிப்பினிலே தமிழிங்கே கைகள் தட்டும்
மண்ணுள்ள வரையிலுமே புகழைச் சொல்லும்
விண்ணெட்டும் நின்பெயரை எழுதிச் செல்லும்

தென்றல்கவி – தமிழ்ச்சிட்டு



44

பாரதியின் பாட்டனைத்தும் கேட்டால் போதும்
    பரங்கியரின் அடக்குமுறை படிக்கத் தோன்றும்
சாரதியாய் அவனிருந்து சாட்டை கொண்டு
    சவுக்கடிபோல் குரல்கொடுத்தே எழுச்சி கண்டான்
பாரதத்தின் சுதந்திரத்தை வாங்கும் முன்னே
    பாட்டியற்றிப் பரவசமாய்ப் பாட வைத்தான்
வீரத்தின் வித்தாக வீறு கொண்டு
    வெற்றியினை மனம்எண்ணி வெகுண்டான் தானும்

இராசகோபால் கவிநெஞ்சன், சென்னை


எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்



45

பண்டிதரின் கைகளிலே பாக்கள் தொற்றிப்
பழங்கதைகள் பேசியதாய்த் தமிழே வற்றிக்
கொண்டிருந்த வேளையிலே புதிதாய் ஒற்றிக்
கொடுத்தானே பாமரனின் மொழியைப் பற்றி
விண்டெழுந்த பாரதியால் விளைச்ச லாச்சு
வீணான வித்தகங்கள் மறைதல் ஆச்சு
கண்டெழுந்த தமிழரினம் கவிதை போற்றிக்
களித்ததுவே வாழ்வியலைப் பாடித் தானே.

வீரா பாலச்சந்திரன்



46

பாரதியைப் பாடுங்கால் மகிழ்ச்சி எல்லை
பரவசத்தைக் கண்டோர்க்கோ ஏது தொல்லை?
பாரதிரக் குரல்கொடுத்த பாங்கைச் சொல்லப்
பாக்களினால் மாலையது தொடுத்தேன் மெல்ல
யாரவராம் அறியாதோர் நாட்டில் இல்லை
யாமறிந்த புலவரிலே அவர்போல் இல்லை
காரமது நெடியாகப் பாட்டில் துள்ளக்
காதாரக் கேட்டவர்க்கோ  இன்பம் கொள்ளை

கந்தநாதன் மஸ்கட்



47

எட்டையப்பு ரத்தானே  எங்கள் ஆசான்
    எம்நெஞ்சில் நிலைத்திருக்கும் அன்பு நேசன்
கட்டப்பொம் மன்வாழ்நி லத்தின் வேந்தன்
    கவிதையாலே மற்றவரைக் கவர்ந்த மாந்தன்
சட்டங்கள் போட்டவரைச் சாடி நாளும்
    சமத்துவத்தைச் சரிசமமாய் விதைத்த சான்றோன்
எட்டாத கல்வியினை எடுத்து(ம்) ஓங்க
    எல்லோர்க்கும்  தந்திட்ட காளி தாசன்.

கவித்தென்றல் சௌ. நாகநாதன்



48

பெண்ணினத்தைக் காத்திட்ட பெரியோன் வாழ்க
பிரபஞ்சம் போற்றுகின்ற புயலே வாழ்க...
மண்ணுலகில் இங்கின்றே மறைந்த போதும்
மாசற்ற உளங்கொண்ட மனிதன் வாழ்க...
கண்ணியத்தைக் காத்திட்ட கடவுள் நீயே
காசினியோ உள்ளவரைக் கலையாய் வாழ்க...
உண்ணாமல் பெண்ணிற்கும் ஒளியைத் தந்த
உயர்வான குணங்கொண்டோன் வாழ்க வாழ்க...

மாரி. வசந்த குமார் திருச்சி.



49

இந்தியாவின் விடுதலைக்கே எழுச்சி பொங்கும்,
எரிமலையாய்க் கவிதைகளை ஈந்த சிங்கம்!
நிந்தைமிகு சாதிமத நெஞ்சக் கேட்டை,
நிரந்தரமாய்ச் சாய்ப்பதற்கே நீண்ட சாட்டை!
சிந்துநடைத் தேன்கவிதைச் சிந்தும் சந்தம்,
சிந்தையெலாம் பெண்ணுரிமைச் செந்தீ முந்தும்,
செந்தமிழுக் கீடில்லாச் செழுமை சூழச்
சீர்கண்ட பாரதியே சிறந்து வாழ்க!

கவிஞர் செகவான்



50

பாத்திறத்தால் வாழ்நிலத்தின் புகழைக் கூட்டிப்
பாமரனைப் பாட்டினிலே ஏற்றி வைத்தாய்
சாத்திரத்தைச் சாடிநீயும் சேற்றில் விட்டுச்
சாதனைகள் பலபுரிய வாய்ப்பு நட்டாய்
கோத்திரமே பெரிதென்று சொல்வோர் முன்னே
கோபங்கொண் டெழுந்துவந்த வேந்தன் நீயே
காத்திடவே தெய்வங்கள் காவல் நிற்கக்
கானத்தில் கதைபடித்து வானம் மீட்டாய்

ஆ. முருகேசுவரி



51

புதியபொருள் பாட்டினிலே தந்து நின்றான்
    புதுமைப்பெண் படைத்திங்கே ஏற்றி வைத்தான்
விதிகளையும் வெல்லுகின்ற வழிகள் சொன்னான்
    வீரமதை நெஞ்சினிலே ஊட்டி விட்டான்
கதியிழந்த மக்களது கவலை போக்கக்
    கண்ணணையும் அழைத்திங்கே கவிதை யாத்தான்
மதியிழந்த அந்நியரை விரட்டி நாட்டில்
    மங்காத தமிழ்மொழியின் மகிமை காத்தான்

திருமதி மாலினி கெனடி இலங்கை



52

பாட்டினாலே வையத்தைப் புகழ்ந்து பாடிப்
பரவசமும் கண்டவரும் பாரில் இல்லை
நாட்டினிலே நல்லவராய் வாழ்ந்த காலம்
நல்லவைகள் செய்தவராய் யாரும் காணோம்
காட்டமுள்ள வார்த்தைகளால் கவிதை பாடிக்
கர்வமுள்ள மனிதனாகி எழுந்து நின்றார்
தீட்டிட்ட கவிவரிகள் திடமும் தந்து
தீயவரை விரட்டிடவே தீயாம் என்றார்

புட்பா கிறிட்டி கனடா



53

நதியனைத்தும் இணைவதுவே நன்றாம் என்றார்
நாதியற்ற மக்களுடன் நடந்து சென்றார்
உதிக்கின்ற உணர்வுகளைக் கவிதை ஆக்கி
ஊருக்கும் உரைத்திடவே உறுதி கொண்டார்
கொதிநிலைக்குச் சென்றாரே கொடுமை கண்டே
கும்பினியர் அடக்குமுறை எதிர்த்தார் அன்றே
எதிலுமெங்கும் இறையுருவைப் பொருத்திப் பார்த்தார்
எதிர்காலம் கணக்கிடாமல் வாழ்ந்தார் வாழி!

இரா. கவிதா, திண்டுக்கல்



54

எட்டையமே ஈன்றெடுத்தாய் தமிழின் யாப்பை
ஏட்டினிலே எழுதிவைத்தாய் கவிதைப் பாட்டை
பட்டியெங்கும் ஒலிக்கவைத்தாய் தமிழின் காற்றை
பற்றுடனே பாடிவிட்டாய் தேசத் தாயை
தொட்டிலிலே எழுப்பிவிட்டாய் வேட்கைத் தீயை
தோன்றியிங்கே மொழிவளர்த்தாய்
தொன்மைத் தாயாய்
வட்டமாகிக் காத்துநின்றாய் தமிழர் வாழ்வை
வணங்கிடவே தமிழுணர்வைக் கொடுத்தாய் நீயே!

தென்பரைத் தமிழன்பன்



55

பார்க்கின்ற பாவலரில் உன்போல் இல்லை
பாக்களைத்தான் புனைவதில் ஈடும் இல்லை
கோர்க்கின்ற வார்த்தைதனில் இன்பம் சேர்த்துக்
கொஞ்சுகின்ற தமிழமுதம் தந்தா ரில்லை
சோர்கின்ற போதுன்போல் அமுதம் தந்து
சோகத்தை வென்றவரோ பாரில் இல்லை
மார்தன்னில் வீரமுடன் பாட்டைத் தந்த
மங்காத பாரதியே வாழ்க வாழ்க

பால கார்த்திகேயன்



56

ஏட்டினிலே படித்ததுண்டு கவியுன் வீரம்
ஏழைகளின் துயர்போக்கப் படைத்துத் தந்த
பாட்டினிலே பாரதியே உன்னை விஞ்சப்
பாரதத்தில் யாருமில்லை இன்றும் போற்றும்
நாட்டினிலே உன்போல நான்கு பேர்கள்
நாளையதில் முளைத்திட்டால் நலன்தான் என்றும்
வீட்டினிலே உன்கருத்தை நாளும் கேட்டு
வீரமுடன் வளர்ந்திடணும் தமிழன் பிள்ளை.!

ஔவை.



57

முண்டாசுக் கவிஞனாகச் சுழன்று வந்தாய்
முடிசூடா மன்னனாக வாழ்ந்தே சென்றாய்
மண்ணாசை கொண்டோரைக் கவியால் பாடி
மங்காத தமிழினையே தாயாய்ப் போற்றிப்
பெண்ணடிமைச் சமூகத்தை விழிக்கச் செய்தே
பெண்களுக்கு வெளிச்சத்தை  ஒளியாய்த் தந்தாய்
கண்ணிழந்த மனிதராக அடிமைப் பட்டோர்
கண்மூடிக் கிடந்திடவே விழிக்கச் செய்தாய்.

வா.சண்முகம் பட்டீச்சுரம்



58

அடிமைதனை அவிழ்த்தெறிய துடித்த வீரன்
அமிழ்தான செந்தமிழைக் காத்த தீரன்...!
துடிப்பாக இளம்வயதில் முதிர்ந்த சேரன்
துவளாமல் எதிர்த்துநின்ற கவிதை மன்னன் ...!
வடித்திட்ட கவிதைகளும் என்றும் வெல்லும்
வாழாத காலத்தில் வான்போல் நிற்கும்!
கொடியேற்றும் நாள்களிலுன் புகழைப் பாடிக்
கொண்டாடி மகிழ்ந்திடுவோம் ஒன்றாய்க் கூடி ...!

பைந்தமிழ்ப்பாமணி ஜோதிபாஸ் முனியப்பன்



59

விடுதலைக்குத் தலைவரெலாம் உழைத்த நாளில்
விடுதலையை மட்டுமிவர் எண்ண வில்லை
அடுத்துவரும் காலத்தின் வளர்ச்சி பற்றி
அறிவுடனே எண்ணியதை எழுத்தில் தந்தார்
எடுத்துரைத்தார் எத்தனையோ வளர்ச்சி காணும்
எதிர்கால நலமளிக்கும் வழிகள் எல்லாம்
படுத்திருந்த பாரதத்தை உயர்த்த வேண்டி
பாரதியார் என்கின்ற புலவர் தாமே

இரா. வேணுகோபாலகிருஷ்ணன். கோவை



60

முண்டாசுப் புலவன்போல் மூர்க்கம் கொண்டே
முத்தமிழைக் கையாண்ட முனைவர் உண்டோ
பண்பாட்டுக் கூறுகளைப் பகுத்துப் பார்த்தே
பகுத்தறிவை மானிடரில் பதியம் போட்டார்
மண்ணெங்கும் மடமைமாந்தர் மாற்றம் வேண்டி
மரபுதனை உடைத்திங்கே புதுமை கண்டார்
பெண்ணினத்தின் மாண்பிற்காய்ப்பேடி நெஞ்சர்
பெரும்மாற்றம் காணத்தான் புரட்சி செய்தார்.

சேந்தன்குடிச் செந்தமிழாழன், புதுக்கோட்டை.



62

செந்தமிழைச் சிந்தனையில் ஏற்றி  வைத்தாய்
சிறப்பான சொற்களாலே சுவையும் தந்தாய்
எந்நிலையில் நின்றாயோ வழுவா நேர்மை
என்றென்றும் மாறாமல் நிலைத்து நின்றாய்
பந்தியிலே தொந்தியினை நிரப்பும் தோழா
பகுத்தறிவைக் கற்றிடுங்கள் சற்றே என்றாய்
பந்தமதில் நிறைந்தாயே மீசை ஒன்றால்
பாசமதை  ஒளித்திடாது காதல் கொண்டாய்.

ரா.ரேகா ராஜகுமார்



62

பாட்டினிலே கருத்தினையே தொனிக்கச் செய்தான்
பக்குவமாய்ப் பதத்தினையே புகுத்தி வைத்தான்
எட்டுதிசை யாவிலுமே பரவச் செய்தான்
எட்டுமறி வினில்பெண்ணும் நிகரே என்றான்
பட்டங்கள் பெற்றுயர வேண்டும் என்றான்
பட்டறிவை மதியினிலே ஏற்றச் சொன்னான்
நட்டுவைத்த பற்றுணர்வை மூட்டி விட்டான்.
நாட்டுநலன் காத்திடலே நன்மை என்றான்

கு. மலர் செல்வி.



63

பாரினிலே பகுத்தறிவைப் பரப்ப வந்தாய்
பார்போற்றும் வகையினிலே உயர்ந்து நின்றாய்
ஊரினிலே உறங்கியோரை எழுப்பி விட்டாய்
ஊழல்கள் செய்தவரை எதிர்த்து வென்றாய்
வேரினிலே பழுத்தபலா வாகி நாட்டில்
வேரூன்றிச் சிறந்திடவே வழிகள் செய்தாய்
மாரியெனக் கவிமழையைப் பொழிந்து வைத்தாய்
மாதர்கள் வாழ்வினிலும் மாற்றம் தந்தாய்!

தி. இராஜபிரபா தேனி



64

பெண்ணடிமைத் தனமொழியக் கவிதை பாடிப்
பெருமுயர்வு பெற்றானே நமது வீரன்!
எண்ணத்தில் தாழ்வின்றி எடுத்துச் சொல்லி
ஏக்கத்தைக் கவிதையிலே விதைத்துச் சென்றான்.
கண்களிலே தோன்றுகின்ற ஒளியைப் பார்க்கின்
கருத்துக்கள் எளிமையுடன் பரந்து செல்லும்.
பண்பட்ட தமிழறிவின் பக்கு வத்தில்
பாரதியார் புகழெங்கும் இன்னும் ஓங்கும்!

பவானி ரெகு



65

கவிதைகளில் விழிப்புணர்வுக் கருத்தை ஏத்திக்
களையெனவே வெள்ளையனைப் பறிக்க எண்ணி
செவியினிலே விழும்படியாய் உரக்கக் கூறிச்
செந்தமிழின் எழுத்துகளில் புரட்சி செய்தாய்
புவிதனிலே பாரதமும் முதலாய் மின்ன
புதுமைகளைப் புகுத்திட்ட கவியும் நீயே
சிவிகையிலே ஏற்றிடுவோம் சிறப்பாய் வாழி
சிந்தையிலே நிறைத்திடுவோம் நிறைவாய் வாழி

பா. ச. கண்ணன்



66

எட்டயபு ரளரிதழல் நிலைப்பாய் என்றும்
    ஏற்றமிகு கவிதையாலே வாழ்வாய் என்றும்
சுட்டெரித்தாய்க் கதிரவனாய்ப் பகையை நீயே
    சுடராக எரிகின்றாய்த் தமிழால் நீயே
கொட்டமதை அழித்திட்டாய்க் கொடுவாள் போல
    கொட்டடித்துக் கூப்பிட்டாய் இடியைப் போலக்
கட்டில்லாத் தமிழாலே கவிதை தந்து
    கடைவிரித்தாய் விடுதலைக்குக் கருத்தாய் நீயே.

இரா. மதனகோபாலன், தர்மபுரி



67

வற்றாத பிரவாக வடிவாய்ச் சொற்கள்
　வழிந்தோடும் பாரதியின் கவிதை எங்கும்
பெற்றோமே பெரும்பேற்றை எம்தாய் நாட்டின்
　பெண்ணினமே அவருடைய பெருமை போற்றும்
கற்றோமே பாரதியின் உணர்ச்சி பொங்கும்
　கருத்தாழம் நிறைந்திட்ட மேன்மைப் பாடல்
சிற்றறிவு கொண்டோரைத் தினமும் அன்பாய்ச்
　சீர்மிக்க சொற்றிறனால் வெல்லும் கூர்வாள்

மகேசுவரி முருகையா.



68

உள்ளத்தில் உண்மையொன்றே வேண்டும் என்றாய்
உலகத்தில் தேசத்தை ஓங்கச் செய்தாய்
வெள்ளத்தில் உருண்டோடும் நீரைப் போல
வீருற்றே கவிதைகளை இயற்றி வைத்தாய்
பள்ளத்தில் வீழ்ந்தோரின் ஏற்றம் கண்டாய்
பாரதத்தில் ஒற்றுமையைக் காணச் செய்தாய்
உள்ளியதில் உயர்வுதனை எண்ணச் செய்தே
உயர்வுற்ற பாரதியின் புகழே வாழ்க

மு. இரெ. முத்து பட்டுக்கோட்டை



69

கவிதைகளில் கருத்துகளைக் கடைந்து பாடிக்
　　கற்காத பாமருக்கும் கற்கை ஊட்டி
நவின்றாரே  கவிதைகளை  நாவும் பூக்க
　　நாட்டிற்கும் சுதந்திரத்தை நல்கிச் சென்றார்
புவிதனிலே அடக்குமுறை புதைத்த மன்னன்
　　புகழ்பெற்று வாழ்ந்திங்கே புதுமை செய்தார்
கவிதையிலே உணர்வுகளைக் கான மாக்கிக்
　　காசினியில் மலர்ந்திட்டார் தமிழின் தீயாய்!

ஜெ வசந்தி  பளை, இலங்கை



70

தேனமுதச் சொல்லெடுத்துத்தெள்ளு பண்ணில்
      தெளித்திட்டார் தீரமிகு கவிதை எங்கும்
கானமுது ஊட்டிவிட கள்ளு தோற்கும்
      கன்னெஞ்சம் கரைந்திட்டே களத்தில் நிற்கும்
மானமதை மீட்டிடவே மண்ணில் வந்தார்
      மலர்க்கொத்தின் மணம்போல வாசம் தந்தார்
வானமுது பொழியுமங்கே வறுமை தோற்கும்
      வையத்துப் பெண்ணினத்துப் பெருமை ஓங்கும்

முருகன் ஊர்க்காவல், சென்னை



71

செந்தமிழில் சொல்லெடுத்துச்செகத்தில் நின்றாய்!
செந்தேனாய் வார்த்தெடுத்துச் செழுமை என்றாய்!
செந்தனலாய் வீசிடுவீர் செற்றம் என்றால்!
செங்கதிராய் பாய்ந்திடுவீர் செறுநர் முன்னால்
தந்திடுவோம் தாய்த்தமிழில் பாக்கள் ஒன்று!
தன்னிகரே இல்லாத தமிழன் என்றே!
வந்திடுவீர் மாகவியே கவிதை கொண்டு
வாழ்த்துகிறேன் பாரதியே வாழ்க! வாழ்க!

தங்க. ஜான்பீட்டர் பாளையங்கோட்டை



72

பார்த்ததெல்லாம் பாட்டாகப் பாடி வைத்தான்
பார்போற்றும் பெரும்புகழைப் பெற்றுச் சென்றான்
சீர்மிகுந்த பாடல்களைச் சிறப்பாய் யாத்துச்
சேர்த்துவைத்த செல்வங்கள் செம்மைப் பாக்கள்
ஆர்த்தெழுந்து அனைவருமே அறியும் வண்ணம்
ஆர்வமுடன் அருந்தமிழின் அழகைப் போற்றிக்
கார்கால மேகமெனக் கவிதை வார்த்துக்
காலமெல்லாம் வாழ்கின்ற கவியைப் போற்று.

க. தங்கவேலு கிருஷ்ணகிரி



73

புதுவையிலே பிறந்திட்ட புலமைப் பித்தன்!
புவியனைத்தும் ஒன்றென்ற ஒருமைச் சித்தன்!
எதுவந்த போதுமவன் அஞ்ச மாட்டான்!
எமனையுமே கால்பிடித்துக் கெஞ்ச மாட்டான்!
புதுவகையில் பாட்டெழுதிப் புதுமை சேர்த்தான்!
புலமையினை யாவருக்கும் பொதுவில் வைத்தான்!
மதுவான சொல்லழகே மணக்கும் பாட்டால்
மனங்களிலே புரட்சிவிதை தூவி விட்டான்!

கோவிந்தம்மாள் இரத்தினம்



74

பாட்டினிலே புரட்சியினைப் படைத்த வீரன்
 பாமரரின் அறிவுக்கண் திறந்த தீரன்!
நாட்டிட்டான் சமத்துவத்தை நாளும் மூச்சாய்
 நவமுடனே சுதந்திரத்தின் மேன்மை சொன்னான்!
ஏட்டினிலே பெண்களுமே ஏற்றங் காண
 எல்லைகளைக் தகர்த்தெறிந்தே முரச றைந்தான்!
வாட்டிநின்ற வறுமையிடை வனப்பைச் சொல்லி
 வரலாறாய்ப் பாரதியும் வாழ்ந்தே நின்றான்!

கீத்தா பரமானந்தன்



75

சொக்குகின்ற செந்தமிழில் பாக்கள் பாடிச்

சொந்தமானாய் நாட்டிற்குச் சொத்தும் நீயே!

துக்கத்தைத் தூரவைத்தே துளிரும் விட்டே

தூய்மையான சுதந்திரத்தீ வளர்த்தாய் தீயாய் !

மொக்குகளும் மலர்ந்திடவே மாற்றம் தந்தாய்

மோதலையும் கவிதையில் தந்தே வென்றாய்!

சொக்கனுமே உன்நாவில் நின்றே வித்தை

செய்தானோ பாரதியே தமிழின் தீயே!

மகேஸ்வரி கிருஷ்ணசாமி



76

சூழ்ந்திட்ட அடிமையினைத் தூர ஓட்டும்
      சூட்சுமத்தை நெஞ்சினிலே நிலைக்க வைத்தான்.
தாழ்வெண்ணம் தவிர்ப்பதனைக் கடமை கொண்டே
      தந்திட்டான் நெருப்பான கவிதை அன்றே.
வீழ்ந்திடாத நெஞ்சுரத்தால் விண்ணைத் தாண்ட
      விதைத்திட்டான் இளைஞரிடம் துணிச்ச லென்றும்.
பாழ்பட்ட பெண்ணினத்தின் பாரில் ஏற்றம்
      படிப்பொன்றில் இருப்பதனைப் புரிய வைத்தான்.

சுப. கல்யாணம்.



77

புதுமைகளைக் கண்டானே சிந்தை தூண்டிப்
புத்துயிரை மனத்தினிலே துளிர்க்கச் செய்தான்
புதுமைப்பெண் நாட்டினிலே உயர்த்திப் போற்றிப்
புரட்சிகளைச் செய்திட்டான் எங்கள் வேந்தன்
பதுங்காது நேர்கொண்ட பார்வை நோக்கும்
பாரதத்தின் சுதந்திரமே மூச்சாய்க் கொண்டான்
முதுமையுமே பார்த்திராத புலவன் பாட்டும்
முறுக்கேறும் சொற்களுமே வீரம் பேசும்.

சசி முத்து, கருமாத்தூர், மதுரை.



78

மண்ணோக்கி வளர்கின்ற விதையைப் போல

மனதோடு வேர்பிடிக்கும் கவிதை செய்தார்

விண்ணோக்கி எரிகின்ற சுடரைப் போல

விழியோடு விடுதலைத்தீ எரியச் செய்தார்

நுண்ணோக்கி காட்டுகின்ற காட்சி போலப்

பெண்ணோடு தைரியத்தைப் பெருகச் செய்தார்

பண்படாத களரான மனங்கள் எல்லாம்

பாட்டாலே ஏர்பிடித்து உழவு செய்தார்

த. புவனேசுவரி கிருட்டிணகிரி



79

பாட்டுக்கோர் புலவனெனப் பாரில் நின்றே
பட்டபாட் டினையறியார் பலரும் உண்டே
ஏட்டினிலே எழுதிட்ட வேட்கை கொண்டே
எழுந்திட்ட சுதந்திரமே இயல்பாய் வெல்ல
வீட்டினிலே விளைந்திட்ட வறுமை கொண்டே
விடியலுக்கு வித்திட்டார் நிலையாய் நின்றே
நாட்டினிலே நல்லதொரு பாட்டி சைத்து
நலம்பலவும் நல்கிட்ட முத்தே வாழி

கவிஞர் முத்து. பரமசிவம்



௪0

பாரதியார் தேசத்தின்  புகழைப் போற்றிப்
பக்தியிலே சக்தியென்றே ஏற்றி னாரே
வீரத்தை  வித்தாக்கி மனத்தில் கொட்டி
விடுதலையின் பயிராக்கிக் கொடுத்தார்  நாளும்
கோரமிகு பரங்கியரை விரட்டல் ஒன்றே
கொள்கையெனக் கொண்டாரே பாட்டைக் கேட்ட
பாரதத்தின் புதல்வர்கள் புயலாய் மாறப்
பாட்டாலே புரட்சிதனை செய்தே போனார்!

சு. பசுங்கிளி. திருநெல்வேலி .



81

நேர்கொண்ட பார்வையெலாம் கவிகள் பேசும்
நிமிர்ந்தநடை ஓசையினால் வீரம் கேட்கும்
சீர்கொண்ட பாட்டினிலே கோர்க்கும் சொற்கள்
செந்தமிழில் தேன்மதுரக் கவிகள் சிந்தும்
சோர்வுகளும் களைந்துவிடும் புதுமை ஊட்டும்
சோம்பலுமே ஓடிவிடும்  பலமே கூடும்
பார்போற்றும் பாரதியின் பாடல் பாடிப்
பைந்தமிழைச்சுவைத்தென்றும் மகிழ்வு கொள்வோம்

செ. நிறைமதி மதுரை.



82

விடுதலைக்காய்க் குரல்கொடுத்தான் கனலாய் வீசி
வீறுகொண்டு எழுந்ததம்மா விடியல் காலம்
படுகின்ற துயரங்கள் கண்டான் பாரில்
பாரதத்தாய் அந்நியரின் பிடியில் சிக்கத்
தடுத்தனபார் பாடல்கள் எழுச்சிக் கொண்டு
தாகங்கள் தீராத அஞ்சா நெஞ்சம்
அடுத்தடுத்து எழுந்தனவே தமிழில் பொங்கி
ஆகாகா!! பாட்டுக்குத் தலைவன் வாழி

தமிழ்நெஞ்சம் அமின், பிரான்சு



83

எழுத்தினிலே அக்கினியை  ஏற்றி வைத்தான்

எங்கெங்கும் செந்தமிழும்   பரவச் சொன்னான்

அழுந்தினிலும்  வறுமையிலே அடிமை யோட

அழகுதமிழ்ப் பாடல்கள்  பாடிச் சென்றான்

செழுமைமிகு மொழிகளெலாம் அறிந்த தாலே

செந்தமிழே சிறப்புமிகு மொழியாம் என்றான்

விழுந்திட்டும் வேழமதால் எங்கள் பாட்டன்

வீழ்ந்திடாது வாழ்கிறானே பாட்டால் இன்றும்

இரா இரத்தினகுமார்



84

வாழ்நாளில் துயரொன்றே வரமாய்க் கொண்டான்
வறுமையிலும்செம்மையுடன்வாழ்ந்துமாண்டான்
தாழ்வுணர்ச்சி கிஞ்சித்தும் அவனுக் கில்லை
தமிழ்த்தாயின் புகழ்பாடிச் சென்ற பிள்ளை
தாழ்வுற்றுத் தரம்தாழ்ந்து கிடந்தார் அஞ்சி
தன்கவியால் வீரத்தை விதைத்தான் நெஞ்சில்
ஏழ்மையினால் எள்ளளவும் குலையா தென்றும்
எரிதணற்போல் பாடலினால் கொதித்து நின்றான்

செல்லமுத்து பெரியசாமி



85

இந்தியாவின் விடுதலையை இதயம் தேக்கி
இல்லாமை வறுமையை இயல்பாய் ஏற்றே
சிந்தனையால் பேச்சினினால் சிறந்த ஆற்றல்
செம்மைமிகு எழுத்தாலே சேவை செய்தார்
முந்தையகா லத்தினுடை முடக்கம் போக்கி
மூச்செல்லாம் சுதந்திரத்தை முனைப்பாய்க் கொண்டு
சந்தித்தத் துன்பத்தைச் சற்றே தள்ளிச்
சாதித்த பாரதியார் வாழி வாழி

பொ. முத்துராக்கு காரைக்குடி



86

எண்ணற்ற  நற்கவிகள் இயற்றித் தந்தே
எம்மொழிக்குப் பாரதிதான் ஏற்றம் செய்தான்
பண்ணிவைத்தான் புதுக்கவிதை பழமை போக்கிப்
பாரதத்தின் விடுதலைக்காய்ப் பாடல் ஆக்கிப்
பெண்ணடிமைத் தனம்நீங்கக் கவிகள் செய்தே
புண்ணியவான்பெண்களுக்கும்பெருமைசேர்த்தான்
எண்ணமதிற் சுதந்திரமே என்றே பாடி
எழுச்சிதந்த மாகவிஞன் எம்முள் வாழ்வான்.

சிவம் முத்து.



87

வெள்ளையரின் ஆட்சியினை விரட்ட அன்று
விடுதலையை வேண்டியேநாம் வீரம் கொண்டோம்.
கள்ளமிலா வேட்கையுடன் கயவர் தம்மைக்
கடுமையாக எதிர்ப்பதையே கருத்திற் கொண்டோம்.
கொள்ளையராம் வெள்ளையரைக் கூட்டை விட்டே
குலைந்தோ டும் வகையினிலே குறிகள் வைத்தே
உள்ளத்தில் உறுதியினை ஊட்டி வந்த
உத்தமனார் பாரதியின் உயர்வைச் சொல்வோம்.

தம்பித்துரை குணத்திலகம், இலங்கை



87

இமைப்பொழுதுஞ் சோராமல் இருக்கும் வண்ணம்
எமக்குரைத்து வழிகாட்டி இருந்த தீரர்
நமைப்பொழுதுஞ் சுதந்திரத்தை நாடச் செய்யும்
நல்லபல விடுதலைப்பா நயந்து தந்தார்
தமைப்பொழுதுந் துயரங்கள் சந்தித் தாலும்
தமிழ்ப்பற்றில் உயரங்கள் தாண்டி வந்தார்
அமைப்பொழுகும் புதுக்கவிதை அறியத் தந்த
அழகுதமிழ்ப் பாரதியார் அவனி வாழ்க!

வைர. வசீகரன்



௪௪

இடைவிரிந்த சாதியத்தை  ஒன்றாய்க் கூட்டி
    இயலாமை யெனுமடிமை யகற்றப் பாடி
நடைச்சிந்தில் சுதந்திரத்தைத் தூண்டி விட்டே
    நடவுசெய்தான் விழிப்புணர்வை நாட்டி வைத்தான்
படையெனுஞ்சொல் பெண்ணுரிமை பகர்ந்தே வீரம்
    பயணிக்கு முணர்வூட்டிப் பாரோ ரேத்தத்
தடையுடைத்தே அந்நியரை யகல வைக்கத்
    தளர்ந்திடாத பாரதியார்  நீதி வாழ்க.

சுப. சாவி.



௯0

பாட்டிற்குப் பாரதிதான் தமிழில் என்பேன்
பாவலரும் போற்றுமவர் தமிழன் என்பேன்
மாட்டிற்கு அவன்தானே ஒருவன் என்பேன்
மாட்சிமையும் சிறப்புமவன் பாட்டில் என்பேன்
ஏட்டிற்கு வேறில்லை அதுபோ லென்பேன்
ஏட்டியில்லை போட்டியில்லை அவனுக் கென்பேன்
வீட்டிற்கும் அவன்பாடல் தனியே என்பேன்
வீட்டிவிடும் துன்பங்கள் அதனால் என்பேன்.

செந்தமிழ், இலங்கை.



91

மண்ணடிமை நீங்கிடவே வேண்டி நின்றான்
மாநிலமே இசைந்திடவே மணக்க விட்டான்
பெண்ணடிமை விலகிடவே புதுமைப் பெண்ணைப்
புவியதனில் பார்த்திடவே பதிய விட்டான்
வண்டமிழின் பெருமைகளை உலகில் சேர்த்தான்
வளத்திற்கோர் ஈடில்லை என்றே சொன்னான்
பண்பட்ட நிலையாலே பண்ணும் பாடிப்
பாரினிலே பாரதியோ மலையாய் நின்றான்.

கோ. அருச்சுணன்



92

தங்கமெனும் தமிழ்மொழியின் தன்மை கொண்டான்
தரணியெங்கும் தமிழினையே உரத்துச் சொன்னான்
பங்கமில்லாப் பாடல்கள் உலகில் தந்து
பக்குவமாய் பாமரர்க்கும் புரிய வைத்தான்
மங்காத புகழுடனே மதிப்பைப் பெற்றான்
மாநிலத்தில் ஏற்றமுடன் மகிழ்ந்தார் மக்கள்
எங்களது தமிழினமும் எழுச்சி கொள்ள
ஏற்றனரே பாரதியின் இனிய பாடல்

புஷ்பகலா ரவீரதன்



93

போராட்டக் காலத்தில் தமிழாய் வாழ்ந்த
பாராட்ட வார்த்தைகள் இல்லா நண்பன்
சீராட்ட மறந்தாலும் அவனே என்றும்
சிறப்புடனே செயல்பட்டான் நாட்டுக் காக
ஊராரின் நலத்தினையே மதியில் வைத்தே
ஊர்போற்ற எழுதினானே கவிதை யாக
ஏராளம் கவிரசத்தைக்  குடித்த நாமும்
ஏத்துவோமே பாரதியை சிந்தை யாலே

உமா ஜெம்புநாதன்.



94

கண்ணென்று காத்தேநீ கவிதை செய்தாய்
    கண்ணிற்குப் ஒளியாகிக் கருணை செய்தாய்
எண்ணாக எழுத்தாக எனக்கே செய்தாய்
    எண்ணாத துன்பத்தை  எனக்காய் கண்டாய்
கண்ணீரால் கலங்காது  கனிவாய்வாழ்ந்தாய்
    கண்ணீரே வாழ்வாகி  கடந்தாய் அன்பாய்
உண்மைதனை  உனக்குள்ளே உயிராய் வைத்தாய்
    உண்மையொன்றே தவமாகி உலகில் வாழ்ந்தாய்!

கவிஞர் ஆர் குணசேகரன்.



95

பாட்டுடைத்த பாரதிநாட் டுடமை ஆனார்
    பாருக்குப் பாரமில்லாப் பாக்கள் தந்தார்
ஏட்டுடைத்த சந்தங்கள் போட்டு டைத்தார்
    ஏமாற்றுப் பேர்வழியைக் காட்டி நின்றார்
பாட்டாலே மூடமெல்லாம் உடைத்தார் நெஞ்சில்
    பட்டதெலாம் கவிதையாக்கி நமக்குத் தந்தார்
வீட்டுடைமை மீட்டிடவும் வேண்டும் என்றார்
    வீற்றிருக்கும் கலங்கரைவி ளக்கும் ஆனார்!

பொன். இளையகுமார்



96

விடுதலைத்தீ வேண்டியவன் மனத்தில் வீரம்
வீறுகொண்டு கவிதைகளை விதைத்துச் சென்றான்
படுதுயரம் கண்டாலும் பாக்கள் மூலம்
பண்புடனே இன்பத்தைக் காட்டிச் சென்றான்
துடிப்புடனே காதலெனும் பயிர்வ ளர்த்த
தூமணியாய் விளங்கியன்றோ வாழ்ந்து சென்றான்
படிக்காத பாமரர்க்கும் புரியும் வண்ணம்
பகட்டில்லாப் பாக்களெலாம் தந்தான் வாழி

ஜெகதாம்பாள் ராஜீவன்



97

நாட்டாமை செய்திடவே பல்லோர் பாரில்
நாசுக்காய்ப் பேசிடுவார் பல்லைக்  காட்டி
வீட்டிற்குப் பொருட்களெலாம் சேர்த்து  விட்டு
வீதியெங்கும் நாட்டிற்கே உழைத்தேன் என்பார்
பாட்டுக்கள் ஆயிரத்தில் பாடி வைத்தும்
பாரதியோ வீட்டுக்குச் சேர்த்தார் அல்லன்
ஏட்டிலுள்ள  பாக்களிலே மக்கள் போற்ற
என்றென்றும் வாழ்கின்ற ஏந்தல் வாழி !

வள்ளல் இராமமூர்த்தி



98

இனங்கொண்ட அடிமைநிலை அகற்ற எண்ணி
எழுச்சிதனைத் தேசத்தில் கவியால் ஏற்றி
சினங்கொண்டே விடுதலைக்காய்ச் சிறைக்குச் சென்றான்
சிந்தித்துச் செயலாற்றப் பாடம் தந்து
மனங்கொண்ட இன்பத்தால் உலகைப் போற்றி
மலர்கவிதை படைத்துள்ளம் கொள்ளை கொண்டான்
கனவுகளை நனவாக்கப் பாடல் பாடி
காசினியில் உயர்ந்தகவிச் செம்மல் வாழி

ந. மணிமாறன்



99

நறுங்கவிதை நாவிசைத்த சாட்டை நீவிர்
 நற்றமிழால் களிப்பினிலே மேன்மை தந்தே!
குறுஞ்செய்தி பலவற்றை உரைத்துக் காத்துக்!
 குற்றமில்லா உள்ளத்தால் எழுச்சி கொண்டே!
அறுசுவையில் அற்புதமாய் விதைத்தாய் நெஞ்சில்!
 அறியாமை இருளினையே துரத்திக் காத்தாய்!
மறுபடியும் விடுதலைக்காய்க் கவிஞன் நீயே
 மறுபிறவி எடுத்துவாராய் பாக்க ளாக்க!

லீலா லோகநாதன். ஆரணி



100

பாரதத்தாய் மிளிர்தற்குப் பாக்கள் தந்தாய்
　　பனிமலையின் மீதுலாவப் படிகள் செய்தாய்
வேரடியில் முளைத்திருந்த களைக ளெல்லாம்
　　வெந்தழிய வேண்டுமென விதிகள் சொன்னாய்
பாரதிரப் பெண்மக்கள் பயில வேண்டிப்
　　பலகவிகள் நீயெழுதிப் படிக்க வைத்தாய்
பாரதியே உன்னால்தான் குயில்க ளிங்கே
　　பைந்தமிழில் இசைபாடிப் பறக்கு தெங்கும்..!

எம் ஆர் ஜெயந்தி, தஞ்சாவூர்



101

வாழ்கின்ற காலத்தில் மதித்தார் இல்லை
வயிற்றுக்குச் சோறிட்டுப் பார்த்தார் இல்லை
ஏழ்மையிலும் நிலைமாறிச் சென்றான் இல்லை
எதுவந்த போதுமனம் கலங்க வில்லை
ஆழ்மனதில் சிறிதேனும் குலைந்தான் இல்லை
அறநெறியை விட்டுவழி நடந்தான் இல்லை
பாழ்பட்ட பாரதத்தை விட்டான் இல்லை
பகுத்தறிவு பாதைதனைத் தொலைத்தான் இல்லை

இராம வேல்முருகன் வலங்கைமான்



102

பட்டினியால் துடிதுடித்தே வாழ்ந்த போதும்
பாரதத்தாய் பட்டதுயர் மறவா துள்ளம்
விட்டகலாக் கவிதைகளை வீசிச் சென்று
விதியதனை மாற்றிடவே வழிகள் கண்டான்
சிட்டுக்கு ருவியாகப் பறந்தே போனான்
சிரமதனில் தமிழேற்றிச் சிறந்தே போனான்
பட்டிதொட்டி யாவிலுமே சுதந்தி ரத்தைப்
பாடியுணர் வூட்டிவிட்ட அரசன் வாழ்க

இராம வேல்முருகன் வலங்கைமான்.

நிலாமுற்றம் முகநூல் குழுமத்தில் நடைபெறும் மரபுக் கவிதை எழுதும் பயிற்சியில் பாரதியின் பிறந்த நாளை முன்னிட்டு நடத்தப்பட்ட எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப் போட்டியில் பாரதியாரைப் போற்றும் வகையில் எழுதப்பட்ட 100 விருத்தங்களுடன் எனது இரண்டு விருத்தங்களும் சேர்ந்து 102 விருத்தங்கள் நிறைந்த தொகுப்பாக இந்நூல் வெளியிடப்படுகிறது.

**இராம வேல்முருகன் வலங்கைமான்**

இந்தத் தொகுப்பானது பாரதி குறித்த தகவல் களஞ்சியமாகவும் கவிதைக் களஞ்சியமாகவும் விளங்குகின்றது. தமிழ்கூறு நல்லுலகத்தில் இந்த நூல் பெரும் வரவேற்பை பெறுமென்பதில் ஐயமில்லை.

**முனைவர் வெற்றி நிலவன்**
மாநிலக் கல்லூரி, சென்னை

வலங்கையார் தொகுப்பும் வாழ்க
      வாய்த்தநற் கவிகள் வாழ்க
கலங்கரை விளக்கம் போலக்
      கைகளில் நூலும் வாழ்க
பலத்துடன் ஒருங்கி ணைந்தப்
      பாவலர் கூட்டம் வாழ்க
நலத்துடன் தமிழின் ஊடே
      நாளெல்லாம் வாழ்க வாழ்க

**தமிழ்நெஞ்சம் அமின்**
பிரான்சு